ஸ்ரீ:

ஸ்ரீமதேராமாநுஜாயநம:

# முக்கோற்பகவர்.

திருவல்லிக்கேணித் தமிழ்ச்சங்க வெளியீடு, 19.

சங்கக் காரியாலயம்:
15, கணபதி முதலி தெரு,
திருவல்லிக்கேணி.
13—3—1949

ஸ்ரீ :

ஸ்ரீமதேராமாநுஜாயநம :



# முக்கோற்பகவர்.


## திருவல்லிக்கேணித் தமிழ்ச் சங்க வெளியிடு-19.


இது

ஸ்ரீஅஹோபில மடம் 42-ஆம் பட்டத்தில் மூர்த்தாபிஷிக்தராய் எழுந்தருளியிருக்கிற ஸ்ரீமத் வேத மார்க்க ப்ரதிஷ்டாப நாசார்ய பரம ஹம்ஸ பரிவ்ராஜகாசார்ய ஸர்வ தந்த்ர ஸ்வதந்த்ரோபய வேதாந்தாசார்ய ஸ்ரீபகவத் ராமாநுஜஸித்தாந்த நிர்த்தாரண ஸார்வபௌம ஸ்ரீலக்ஷ்மீந்ருஸிம்ஹ திவ்ய பாதுகாஸேவக ஸ்ரீவண் சடகோப

**ஸ்ரீ ஸ்ரீரங்க சடகோப யதீந்த்ர மஹாதேசிகன்**

# எழுபதாண்டு நிறைவு

நன்னாளாகிய ஸர்வதாரியாண்டு தையொரு திங்கள் பதினைந்தாம் தேதி வெள்ளிக்கிழமை திரு உத்திராடத்தன்று திருவெவ்வுளூரில் ஸ்ரீ அஹோபில மடத்தில் ஸ்ரீ அழகியசிங்கர் திருவடி வாரத்தில் இடப்பெற்ற காணிக்கை.


பதிப்பாசிரியன் :

பந்தல்குடி பாரத்வாஜ மாடபூசி

**ரெ. திருமலை அய்யங்கார்**


28—1—1949.

## உள்ளுறை


ஸ்ரீ அழகிய சிங்கர்

முகவுரை ... i—vii

முக்கோற்பகவர் ... 1

[பந்தல்குடி பாரத்வாஜ மாடபூசி
ரெ. திருமலை அய்யங்கார், தமிழ்
வித்துவான், காரியதரிசி, திரு
வல்லிக்கேணித் தமிழ்ச் சங்கம்.]



ஜோதி பிரஸ், திருவல்லிக்கேணி, சென்னை-5.

# முகவுரை.

நல்லை நெஞ்சே! நாம் தொழுதும் நம்முடை நம்
பெருமான்
அல்லிமாதர் புல்கநின்ற ஆயிரந்தோளனிடம்
நெல்லி மல்கிக் கல்லுடைப்பப் புல்லிலை யார்த்து
அதர்வாய்ச்
சில்லுசில்லென் றெல்லரு சிங்கவேள் குன்றமே.
—(பெரிய திருமொழி 1-7-9)

வாழ்குமரன் மேற்கனக வஞ்சகன் மேலோர்முகத்தே
சூழ்கருணையும் முனிவுந் தோன்றியவாற்—கேழ்கிளரு
மங்கவேள் குன்றவழல் சரபத்தைப் பிளந்த
சிங்கவேள் குன்றத்தி னார்க்கு.
— (நூற்றெட்டுத் திருப்பதி யந்தாதி, 97)

உலகெலா முவந் தேத்தும் பெற்றியரான பண்டைத் தமிழர் 'நன்றாக குரு வாழ்க குருவே துணை' என்றும், 'குருபாதமே துணை' என்றும் கண்டறிந்து அதற்குத் தக வொழுக்கத்தினையும் கைக் கொண்டனர். தேனார் கமலத் திருமா மகள் கொழுநன் தன்னருளால் தானே குருவாகி மானிடர்க்காய் இந்நிலத்தே தோன்றுகிறான். குருவின் வாசகங் கொள்பவர் திருவின் கேள்வனை அடைதல் திண்ணமே. நற் குருவை அடைந்தக் கால் வைகுந்தம் புகுவது எளிதினும் எளிதே. உயிர் தந்து அளிப்பவரே உத்தம வாரியார். குருக்கள் நிரை வணங்கி இன்னமுதத் திருமகள் முதலியோரை முன்னிட்டு எம்பெருமான் திருவடிகளை அடைதலே கற்றதனலாய நற்பயன்.

எத்திசையும் ஏத்தநின்ற எழிற்குருகாபதியும்
பத்தியுடைப் பாகவதர் போற்றும் பூதூர் முனியும்
சத்தியத்தின் மூர்த்தியெனநின்ற மறையோனும்
இத்தலத்தி லோருருவில் மாமுனியாய் வந்தார்.

ஸ்ரீ சடகோபன், எதிராசன், வேதசிரத் தேசிகன் என்ற மூவருமே ஒருருவாய்த் தோன்றியவர் ஸ்ரீ அஹோபில மட திவ்யாஸ்தாநத்தை ஸ்தாபித்த ஸ்ரீமத் வேதமார்க்க ப்ரதிஷ்டாப நாசார்ய பரம ஹம்ஸ பரிவ்ராஜகாசார்யா ஸர்வ தந்த்ர ஸ்வதந்த்ரோபய வேதாந்தா சார்ய ஸ்ரீபகவத் ராமாநுஜ ஸித்தாந்த நிர்த்தாரண ஸார்வ பௌம ஸ்ரீ ஆதிவண் சடகோப யதீந்திர மஹா தேசிகன்.

“ *இங்கு நிற்பவர்தான் அஹோபிலம் ஜீயர். இவரோடு 40- ஜீயர்களாய் இந்த க்ஷேத்ரத்தின் தர்மங்களைப் பரிபாலித்து வருகிறார்கள். இவர்களில் முதன்மையானவர் ஆதிவண் சடகோப ஜீயர் என்பவர். அவர் திரு நாராயணபுரத்தில் கிடாம்பி கேசவாசார்யர் குமாரராய் அவதரித்து, பால்யத்திலேயே ஸர்வ சாஸ்த்ர விசாரதராய், காஞ்சீபுரத்தில் நிகமாந்த மஹா தேசிகன் ப்ரசிஷ்யராய், ந்ருஸிம்ஹோபாஸநத்தால் ஒரு நாழிகைக்கு நூறுச்லோகம் பண்ணும் கடிகாசதம் அம்மாளிடத்தில் சாரீரக பாஷ்யாதி காலக்ஷேபம் பண்ணிக்கொண்டிருக்கும் போது, இச்சிங்கவேழ்குன்றத்தெம்பெருமான் ஸ்வப்நத்தில் சென்று ‘கிடாம்பி ஸ்ரீநிவாஸாசார்யரே! நீர் தெய்வமல்லால் செல்ல வொண்ணுச் சிங்கவேழ்குன்றமேற வந்து, நம்மிடத்தில் ப்ரேஷ மந்த்ர துர்யாச்ரமாதிகளை ஸ்வீகரித்து, நம் நவமூர்த்திகளில் ஒருவரை நிச்யமாக ஆராதித்துக்கொண்டு, க்ராம நகரங்கள்தோறும் சென்று, ராமாநுஜ ஸித்தாந்தத்தைத் தழைக்கச் செய்யும்’ என்று நியமிக்க, அவரும் விஸ்மிதராய், தம் ஆசார்யரிடத்தில் ஸ்வப்நத்தை விஜ்ஞாபித்த், அவருடைய நியமனத்தின்பேரில் இந்த அஹோபிலத்திற்கு வந்து, ஸ்வப்நத்தில் நியமித்தபடி பிக்ஷுரூபியாய் வந்த லக்ஷ்மீந்ருஸிம்ஹனிடத்தில் ப்ரேஷதுர்யாச்ரமாதிகளை ஸ்வீகரித்து, நவமூர்த்திகளில் ஒருவரான லக்ஷ்மீநருஸிம்ஹனைத் தமக்கு ஆராத்யராக எழுந்தருளப்பண்ணிக்கொண்டு க்ராமைகராத்ரமாகச் சென்று, தம் அடியார்களைத் திருவிலச்சனை காலக்ஷேப பரஸமர்ப்பணாதிகளாலே உஜ்ஜீவிப்பித்துக்கொண்டு, ராமாநுஜ ஸித்தாந்தத்தைத் தழைக்கச் செய்துவந்தார். அவர், தம் சிஷ்யனாய் இருந்த விஜயநகரம் ராஜாவான முகுந்த தேவராயன்மூலமாக இந்தத் திவ்ய தேசத்தின் நித்யோத்ஸவாதிகளை நடத்திவந்தார். அதுமுதல் இது

* “ஸ்ரீ அஹோபிலமும் இரண்டு கந்தர்வர்களும்” -வேதாந்த ,. ஸம்புடம் 7. (1917-நள-பிங்கள ஆடி) - பக்கங்கள்-116-117.

பர்யந்தம் இந்தத் திவ்யதேசம் பரம்பரையாக அஹோபிலம் ஜீயர்களுக்கு ஸர்வஸ்வாதீநமாய் இருக்கிறது. 'அஹோபிலே ஸ்ரீந்ருஸிம்ஹ: ப்ரேஷமந்த்ரம் ஸ்வயம்ததௌ' என்கிறபடி ந்ருஸிம்ஹன் உபதேசித்த ப்ரேஷமந்த்ர பரம்பரை இந்த ஸந்நிதி ஜீயர்களுக்கு வருவதால் இந்த ஸம்ப்ரதாயத்திற்கு ஏற்றம் கூறுவர்."

எம்பெருமானர் தரிசனத்தை நாடெங்கும் பரவச் செய்து வரும் ஸ்ரீ அஹோபிலமட வாரியர்களில் தற்போது ஆஸ்தாநத்தில் மூர்த்தாபிஷிக்தராய் எழுந்தருளியிருக்கும் அழகியசிங்கர் ஸ்ரீ லக்ஷ்மீந்ருஸிம்ஹதிவ்ய பாதுகா ஸேவக ஸ்ரீவண்சடகோப ஸ்ரீ ஸ்ரீரங்க சடகோப யதீந்த்ரமஹா தேசிகர். அறிஞரும் பக்தரும் யோகிகளும் மதாசாரியர்களும் மடாதிபதிகளும் பிறந்து வளர்ந்த நாடே சீர்பெற்ற நாடென்று சிறப்பாகப் புகழப்படும். 'சான்றோருடைத்து தொண்டை நன்னடு'. அஹோபில மடாதிபதிகளாய்ப் பிரசித்தி பெற்ற இரு அழகிய சிங்கர்களையும் ஒரு திரு வம்சத்திலே அவதரிப்பித்த பாக்கியம் பெற்ற நாடு எது வென்று கூறவும் வேண்டுமோ? செய்யாற்றுக் கருகில் இஞ்சிமேடு என்ற அழகிய சிறு அக்கிரஹாரம் உள்ளது. இச் சிற்றூர் ஸ்ரீபெரும்பூதூரையும், சீரார் துப்புலையும் விடப் பெருமை பெற்று விட்டது. இவ்விரண்டும் உலகிற்கு உதவிய ஒவ்வொரு ஆசாரியர்களுக்கே பிறப்பிடமாகும் மாதவம் பெற்றன. இஞ்சிமேடாகிய திருவயோத்தியோ இரு அழகிய சிங்கர்களுக்குத் தாயகமாக அமைந்து வானேங்கு பெரும் புகழ் படைத்துள்ளது. இங்கு "அஹோபில யாத்ரை செய்த பௌராணிகன்" பல்லாண்டுகட்கு முன் வரைந்ததைக் காண்மின்.

"இதுதான் அஹோபில ந்ருஸிம்ஹன் ஸந்நிதி. இங்குள்ள பவநாசிநீயின் குண்டத்தைக் 'கஜ தீர்த்தம்' என்று புராணம் கூறுகிறது. இங்கு இறங்கி மண்டபங்களால் அலங்கரிக்கப் பட்ட குஹையிலுள்ள அஹோபில ந்ருஸிம்ஹனை ஸேவிப்போம் வா. இதோ சக்ரா காரமாய் மேலே மலை நீரின் கீழ் ஓர் மேடையில் த்விபுஜனய் ஹிரண்ய கசிபுவின் ஸம்ஹாரத்திருக் கோலத் ஸேவை ஸாதிப்பதைப் பார். இவர் திருவடிகளில் ஒழிவில்

மெல்லா முடனுய் மன்னி வழுவிலா வடிமை செய்யக் கருது. இவர் தான் ஒன்பது பேர்களிலும் ப்ரதாநர் என்று "இதம்தத் ப்ரதமஸ்தாநம் ப்ரஹ்மாதி பிருபாவிதம் | ஸ்தா நாங்யங்யாநிஸந்த்யேவ |" இத்யாதிகளில் ப்ரதி பாதிக்கப் பட்டிருக்கிறது. இது ஒரு ஆச்சர்யம் பார். இந்த ஜநங்கள் ஆற்றின் வெள்ளத்தால் தாமஸித்து வர இக் கோயில் அர்ச்சகர் 'நான் ப்ரஸாதத்தை ஸ்வீகரித்து விட்டேன். இனி ஸந்நிதிக்கு வரமுடியாது. நீங்களே உபஹாரம் ஸமர்ப்பித்து ஸேவியுங்கோள என்று நியமிக்க, இங்குள்ள பாகவதர்களும் அந்நிய மதத்தை அங்கீகரித்து எல்லாரும் ஒரு முகமாய் இந்தவ்யக்தியைத் தத்கால கைங்கர்யத்தைப் பண்ணும்படி நியமித்தார்கள். இவரும் அர்ச்சக முகத்தாலே ந்ருஸிம்ஹனே நியமிப்பதாக எண்ணி, பாகவத நியமனத்தைச் சிரஸாவஹித்து 'அகலில கலு மணுகிலணுகும்' என்னும் திவ்ய ஸூக்தியை மநஸ்ஸால் நினைத்து, 'விதிவாய்கின்ற காப்பார்' என்று ஸந்தோஷத்துடன் உப ஹாராதிகளை ஸமர்ப்பிக்கின்றார் பார். இவர் துண்டீர மண்டலத்தில் ஷஷ்ட பராங்குச ஸ்வாமியால் ப்ரதிஷ்டிதமான 'இஞ்சிமேடு' என்கிற அக்ரஹாரத்தில் ஜநித்தவர். இவருடைய ஜ்ஞாதிகளில் ஒரு மஹாந் இந்த அஹோபிலா ஸ்தாநத்தை அலங்கரித்திருந்தார். அவருக்கு 'அத்திப்பட்டு சடகோப ராமாநுஜ ஸ்வாமி' என்று திருநாமம். இவர் ராமாநுஜ ஸித்தாந்தத்தில் சிறந்த ஜ்ஞாநமுடையவர். ஸ்ரீ முஷ்ணத்தில் அவதரித்த ஸ்ரீமத் ஸ்வர்ணம் ஸ்வாமி திருவடிகளையே ஸர்வ ப்ரகாரத்தாலும் உத்தாரகமாக நினைத்தவர். இவர் க்ஷண காலமாவது இந்த ந்ருஸிம்ஹனை நிருபாதிகமாக ஆராதித்ததற்கு இவருடைய ஜந்மாந்தர ஸுக்ருதமே காரணம்" ("ஸ்ரீ அஹோபிலமும் இரண்டு கந்தர்வர்களும்,"-வேதாந்த தீபிகை - ஸம்புடம், 7. பக்கங்கள் 170-171.)

இது கலியுகாதி 5017-ஸூத்துக்குச் சரியான நள ஸூ ஆவணி மீ 26-உ ஸ்ரீ அஹோபிலத்தில் நடந்த ஸம்ப்ரோக்ஷண மஹோத்ஸவ விவரணமாக எழுதப்பெற்றது. காய்தல் உவத்தல் அகற்றி இதனைக் கூர்ந்து நோக்கின் இதனை வரைந்தவர் 'வெள்ளைப் பரிமுகர் தேசிகராய் விரகாலடியோம் - உள்ளத் தெழுதிய தோலையிலிட்டனம்' என்ற கணக்கிலே சிங்கவேள் குன்றத்தானல் அன்றே அடைக்கலம் கொள்ளப் பெற்றவர் என்பதும், அவ்வுரை முற்றும் "பொய்யா மொழி" என்பதும், அம்மிக்க வேதியர் முக்காலங்களு முணர்த்தும் முனித்

தலைவர் என்பதும், 'என் சிங்கப்பிரான் பெருமை ஆராயுஞ் சீர்மைத்தே' என்ற பொய்யில் பாடலை நன்கு தெளிந்தவர் என்பதும், அச்சான்றோர் ஆசார்ய பக்தியிற் றலைசிறந்தவர் என்பதும், தெள்ளிய சிங்கனின் உண்மை உணர்பவரே உத்தமர் என்பதும் நன்கு அறியலாம். மேலும் இது "தன்னைப் பிறன்போலக் கூறியது" என்ற கவிசமய விலக்கணத்துள் அடங்கியிருப்பதும் அறிந்து இன்புறற் குரியது. அதிலிருந்து ஈராறு ஆண்டுகட்குள்ளேயே (21-4-1929) ஆச்ரம ஸ்வீகாரம் பெற்று திருவரங்கத்தில் ஸ்ரீ தசாவதாரன் ஸந்நிதியில் முக்கோற்பகவராய்த் திகழ்ந்தாரெனின் முன்னர்க் காட்டியது "கன்மேலெழுத்து" அன்றி வேறு யாது?

அல்ல லமரரைச் செய்யுமிரணி யனாகத்தை
மல்ல லரியுருவாய்ச்செய்த மாயம் அறிந்துமே
—(திருவாய்மொழி 7-5-8)

மாயமறிபவர் மாயவற் காளன்றி யாவரோ?
—(ஷை 7-5-9-)

என்பன இவண் அநுஸந்தேயம். 'அவனன்றி யோரணுவும் அசையாது,'

இவ்வழகிய சிங்கரது தூயவுள்ளத்தை அறிய அவாவுபவர் *"சீலமில்லாச் சிறியனும் அவன் மனமும்." என்ற கட்டுரையைக் கற்பாராக. "நளிநாக்ஷமாலாதிகளைக் கையில் எடுக்கும்போதெல்லாம் இந்த ஆள்மருட்டுங் கொட்டையையும், விருவிருத்தான் பூண்டையும், நாக்கறுத்தான் புல்லையும் கண்டன்றோ ஜநங்கள் ப்ரமிக்கின்றார்கள் என்று ஸ்ரீ ஈச்சம்பாடியார் தேசிகாசாரியார் ஸ்வாமி சொன்னது ஜ்ஞாபகத்திற்கு வருகிறது. வேஷதாரியான நம்போலியர் விஷயத்தில் அவர் சொன்னது உண்மையே" என்பது அதன் ஒரு பகுதி. இவ்வுத்த

---

*வேதாந்த தீபிகை. ஸம்புடம்-7. பக்கம்-237.

மரது குணாநுபவம்பண்ணக் கருதுவோர் திருக்குடந்தையில் துன்மதி ௵ (1921) மார்கழித் திங்களில் நடந்த ஸ்ரீ வைஷ்ணவ ஸித்தாந்த ஸபையின் பதினொன்றாவது வார்ஷிக மஹாசங்கத்தில் அக்ராஸனம் வஹித்தவமயம் செய்த * "ஸத்ஸங்கவைபவம்" என்னும் நல்லுரையைக் காண்பாராக. அதன் முற்றுப்பகுதி பின் வருமாறு ;—

"இப்படி ச்ருதி இதிஹாஸ புராணங்களாலும், ஆழ்வார்களின் அருளிச் செயல்களாலும், ஸ்ரீ தேசிகாதிகளின் திவ்ய ஸூக்திகளாலும் ஸர்வ புருஷார்த்தத்துக்கும் மேற்பட்டதாய் மகிழ்ந்து கொண்டாடப்பட்ட ஸத்ஸங்கத்தினுடைய வைபவத்தை இங்கு ப்ரத்யக்ஷமாகவும் காணலாம். அதெங்ஙனே என்னில்:— ஸநகஸநந்தனாதி துல்யர்களான மஹான்கள் கூடிய இம்மஹாஸபையில் அடியேன் அக்ராஸனத்தை வஹித்ததும், அத்யல்பமான அடியேனுடைய அறிவைக்கொண்டு அறிய அரிதான மஹான்களுடைய வைபவத்தை எடுத்து உரைத்ததும், ஸத்ஸங்கத்தின் கார்யமே ஒழிய அடியேனுடைய யோக்யதா கார்யமில்லை என்பது ஸர்வருக்கும் ப்ரத்யக்ஷமே. இப்படிச் சிறியேனையும் தம்ஸம்பந்தத்தால் பெரியோனாக்கவல்ல மஹான்கள் நிறைந்த இந்த ஸதஸ்ஸில் அடியேன் விஜ்ஞாபித்த விஷயத்தில் ஏதாவது ஈஷத்குணம் இருந்தால் அது ஸத்ஸங்க ப்ரயோஜ்யமென்றும் இதிலுள்ள தோஷங்களெல்லாம் அடியேனுடைய ஸ்வபாவ ப்ரயுக்தமென்றுங்கொண்டு இங்குள்ள மஹான்களெல்லாம் அடியேனை அநுக்ரஹிக்க வேண்டுமாய் ப்ரார்த்திக்கின்றேன்."

இவ்வழகியசிங்கர் குணக்குன்று ; உத்தம வள்ளல் ; உழைப்பால் உயர்ந்த உத்தமோத்தமர் ; வறுமையிற் செம்மைகண்டு களித்த கற்றோர் ; கல்வியே கருந்தனம் எனப் போற்றி அச்சிறப்பினை அனைவரும் எய்த அநவரதமும் உதவும் உயர்ந்தோர். என்புகழ்கின்ற தேஜமை?

இவ்வமலர் எழுபதாண்டு நிறைவெய்தித் திகழ்கின்றார் திருவெவ்வுளூரில். அன்று (28-1-49) அங்கு "முக்கோற் பகவர்" என்னும் மகுடம் புனைந்த கட்டுரை அவ்வழகிய சிங்கர் திருவடிகளில் காணிக்கையாக இடப்பெற்றது.

---

* வேதாந்த தீபிகை: ஸம்புடம்-12. பக்கங்கள்-181, 232, 317.

இத்தமிழ்ச் சங்கத்தபிமானியும், அந்தணச் சிரேட்டரும், ஆசாரிய பக்தியிற்றலைசிறந்தவரும், உயர்ந்த தேசிக பக்தரும், செந்தமிழார்வத்திருவுடையவரும், சம்பிரதாயாபிவிருத்தியில் நன்னேக்கு உடையவரும் ஆகிய ஸ்ரீமான் கலியாணபுரம் கருமாணிக்கம் ஸ்ரீநிவாஸகோபாலய்யங்கார் அவர்களே இச்சங்க வெளியீட்டிற்குப் பூரணவுதவிபுரிந்த புண்ணியர். அவரும் அவரது உற்ருர் உறவினரும் திருநரசிங்கப் பெருமானது திருவருள் பெற்று இன்புறுவாராக.

தாயாதி வாழத்தவம் பெற்றிருக்கின்றேன்.
என் சிங்கப்பிரான் பெருமை ஆராயுஞ்சீர்மைத்து.
வாழ்க வய்யகம்.
பொலிக பொலிக பொலிக முக்கோற் பகவர்.
பொங்கும் மங்கலம் எங்குந் தங்குக.

எண் பெருக்கு அந்நலத்து
ஒண் பொருள் ஈறில
வண்புகழ் நாரணன்
திண்கழல் சேரே.

—(திருவாய்மொழி 1-2-10)

ஸ்ரீரங்கவிலாசம்,
15, கணபதி முதலி தெரு,
திருவல்லிக்கேணி,
13—3—49

ப. ரெ. திருமலை அய்யங்கார்,
காரியதரிசி.

ஸ்ரீ:

# முக்கோற்பகவர்.



[பந்தல்குடி பாரத்வாஜ மாடபூசி
**ரெ. திருமலை அய்யங்கார்,**
தமிழ் வித்துவான், காரியதரிசி,
திருவல்லிக்கேணித் தமிழ்ச் சங்கம்.]

வாழி யருளாளர் வாழியணி யத்திகிரி
வாழி யெதிராசன் வாசகத்தோர் - வாழி
சரணா கதியெனுஞ் சார்வுடன்மற் றொன்றை
யரணாகக் கொள்ளாதா ரன்பு.

— (தேசிகமாலை. மெய்விரத நன்னிலத்து மேன்மை.)

[பேரருளாளர் வாழ்க. மண்மகளார்க்கு அலங்காரமான திருவத்திகிரி வாழ்க. பெரும்பூதூர் வந்த வள்ளலாகிய ஸ்ரீ பாஷ்ய காரருடைய திவ்ய ஸூக்திகளில் ஈடுபட்டவர் வாழ்க. பிரபத்தி யென்னும் சரமோபாயத்துடன் வேறு ஒன்றை உபாயமாகக் கொள்ளாதவர்களுடைய பக்தி வாழ்க.]

உலகத்தில் தத்வ ஞானத்தைப் பெற்று உஜ்ஜீவிப்பதற்கு அநாதியான வேதத்தையே முக்கியப் பிரமாணமாகக் கொள்ளத்தக்கதென்பர் சான்றோர். குடிப்பிறப்பு, கல்வி, நற்குணம், வாய்மை, தூய்மை, நடுவுநிலை, அழுக்காறிலாமை, அவாவின்மை யென்னும் எட்டு இயல்புகளைப் பூரணமாக வுடையவரே சான்றோர். 'இழைத்தாரொருவரு மில்லாமறை' யென்றபடி ஒரு புருஷனால் செய்யப்படாத தோன்றுதலான் வேதம் தோஷமற்றதாயிருக்கும். அதனால் இதிற் சொல்லப்

பெறுவன வெல்லாம் உண்மையாயிருக்கும் என்பது பற்றியே இது முக்கியப் பிரமாணமாக விளங்கு கின்றது. உபப்ரம்மணங்களான இதிஹாஸ புராணங் களும் அரிதுணர்தற் பாலதான வேதப் பொருளைத் தெளிவாக வெளியிடுகின்றதனுல் பிரமாணங்களாகும். 'உபப்ரம்மணம்' என்பதற்கு 'விளங்கச் செய்வது' என்று பொருள். இது நிற்க, அலகில்லன வுள்ளன யெனப்பெறும் வேதங்களும் தங்களுடைய ஆப்த தையை (உண்மையை)த் தெரிவித்தற்கு "ப்ரஹ்ம வாதிநோ வதந்தி" (ப்ரஹ்மஜ்ஞாநிகள் இங்ஙனம் உரைக்கின்றார்கள்) என்று எடுத்துக் காட்டுகின்றபடி யால்இந்த ஆப்த வாக்யமும் பிரமாணமாகும் என்னத் தட்டில்லை. அந்த ஆப்தர்களும்

திடவிசும் பெரிவளி நீர்நிலம் இவைமிசை
படர்பொருள் முழுவதுமாய் அவையவை தொறும்
உடல்மிசை உயிரெனக் கரந்து எங்கும் பரந்துளன்
சுடர்மிகு சுருதியுள் இவையுண்ட சுரனே.

— (திருவாய் மொழி 1-1-7)

என்று தம்முடைய ஆப்ததையைத் தெரிவிக்க வேதத்தை யெடுத்துக் காட்டியதினுல் வேதமும் ஆப்த வாக்யமும் ஸமப்ரதான மாகும் என்று கொள்ளத் தக்கது. ஓரர்த்தத்தை உள்ளபடி யறிந்து தான் அறிந்த வாறே பிறருக்கு உபதேசிப்பவன் ஆப்தன்.

வேதம் மிகச் சிறந்ததாயினும் அது ஒருபடியாக வுரைக்காமல் பல்வேறு வகையாக உரைத்துச் செல் கின்றது. அதனுல் நுண்ணுணர் விலார்க்கு அது பெரி தும் ஐயத்தை விளைக்கும். பிர்ம்ம வித்துக்களாயிருப் பார் வேதத்தின் முடிபுகளை நன்கு அறிந்து நிச்சயித்து உரைக்கும் பெற்றியராதலால் இவர்கள் வாக்யம் தெளிவடைதற்கு ஏதுவாயிருக்கும், ஆதலால் ஆப்த வாக்யம் பிரபல பிரமாணமாகக் கொள்ளத்தக்கது.

இஃதன்றி, சில ஆப்தர்கள் ஸர்வேசுவரனுடைய அநுக்ரஹ விசேஷத்தால் அவனது ஸ்வரூப ரூபகுண விபூதிகளை உள்ளபடியே சாக்ஷாத்கரிக்கும் பெற்றியரா யிருப்பர். அப்பகவானது அருளால் அனைத்தையும் அறிந்தவர்கள் 'மாலுகந்த வாசிரியராம்' ஆழ்வார்கள். இவர்களது அவதாரம் அப்பரந்தாமனது அபிநவதசாவ தாரம் என்பர் மறைமுடித்தேசிகனர். இதனாலும் ஆப்த வாக்யம் பிரபல பிரமாணமேயென நன்கு அறுதியிட லாம்.

ஆப்த வாக்யமே ப்ரபல ப்ரமாணம் என்று மதித்து பீஷ்மரை நோக்கி,

"கோதர்மஸ் ஸர்வதர்மாணாம் பவத:
பரமோமத:"

[எல்லாத் தர்மங்களுள் எந்தத் தர்மமானது சிறந்த தென்று உம்மால் சம்மதிக்கப்பட்டதோ அதைச் சொல்ல வேண்டும்] என்று வினவினர். "தர்மஜ்ஞ ஸமய: ப்ரமாணம் வேதாச்ச" (ஸித்த ஸாத்யரூபமான தர்மங்களை உள்ளபடி உணர்ந்திருக்கிற பெரியோர் களுடைய ஆசாரம் அநுஷ்டானத்துக்கு முக்ய ப்ர மாணம், வேதங்களும் இவர்கள் திருவுள்ளத்தை யநு ஸரித்து ப்ரமாணமாகும்.) என்கிற ஆபஸ்தம்ப ஸூத்ர ப்ரகாரமும் தர்மமுறையறிந்த ஆப்தர்கள் வாக்கியம் முக்கிய பிரமாணம் என்பது தேற்றம்.

மேயர் புகழ் வில்லிபுத்தூர் விட்டுசித்தன்தூய திருமகளாய் அவதரித்து அரங்கனருக்குத் துழாய்மாலை முடிசூடிக்கொடுத்த மாதரசி ஸ்ரீ ஆண்டாள். இக்கோதி லாக் கோதை அருளிச்செய்த "திருப்பாவை" எனும் "சங்கத் தமிழ்மாலை முப்பதா"கிய சீரிய நற்பிரபந்தம் வேதம் அனைத்துக்கும் வித்தாகும். இதனை "உபநிடதம்" என்றே அறுதியிடுவர் உத்தமராம் வேதாந்தகுரு. இதில் இவ்வுத்தமி

மாலே மணிவண்ணா மார்கழி நீராடுவான்
மேலையார் செய்வனகள்

—(திருப்பாவை, 26)

என்று அருளிச்செய்துள்ளது காண்க,

வழக்கெனப் படுவதுயர்ந்தோர் மேற்றே
நிகழ்ச்சி யவர்கட் டாகலான.

—(தொல்காப்பியம். பொருள், மரபியல் சூத்திரம் 92)

என்பதும் நோக்கத்தகும் ஈண்டு.

இதுவரையும் உரைத்ததனல் ஆப்தவாக்யமே முக்ய ப்ரமாணமாகும் என்பது நன்கு தெளியலாம்.

ஆப்தர் என்பது முக்கோற் பகவரையுங் குறிக்கும். எங்ஙனமெனின்? முற்றத் துறந்தவர்களிடத்திலே ஆப்தத்வம் உண்டு. உலகப் பற்றுடையாரிடத்தில் ஆப்தத்வம் உண்டாக மாட்டாது. இதுபற்றியே தெய்வப் புலமைத் திருவள்ளுவ நாயனுரும் அறமுதற் பொருள்களை உலகிற்கு உள்ளவாறு உணர்த்துவார் முற்றத் துறந்தவரே யாவர் என்று "நீத்தார் பெருமை" என்ற அதிகாரத்தான் அவர்கள் இயல்பெடுத்து இயம்பினர். அவர்களைக் குறிக்கையில்,

ஒழுக்கத்து நீத்தார்

[தமக்குரிய வொழுக்கத்தின் கண்ணே நின்று துறந்தவர். தமக்குரிய வொழுக்கமாவது, தத்தம் வருணத்திற்கும் நிலைக்கும் உரிய வொழுக்கம்.] என்றும்,

துறந்தார்

[யான், எனது என்னும் இருவகைப் பற்றினையும் விட்டவர்] என்றும்,

இருமை வகைதெரிந்து ஈண்டறம் பூண்டார்

[பிறப்பு, வீடு என்னும் இரண்டனது துன்பவின்பக் கூறுபாடுகளை ஆராய்ந்தறிந்து அப்பிறப்பை நீக்கு

வதற்கு இப்பிறப்பின்கண் துறவறத்தைக் கொண்டவர்] என்றும்,

ஐந்தவித்தான்

[சப்தாதி விடயங்களிற் செல்லுகின்ற ஐந்தாசைகளையும் அடக்கினவன்] என்றும்,

நிறைமொழி மாந்தர்

[பயன்நிறைந்த சொல்லையுடைய முனிவர். "நிறைமொழி மாந்தராணை யிற்கிளந்த, மறை மொழிதானே மந்திரமென்ப" என்பது தோல்காப்பியம். நிறைமொழி யென்பது அருளிற் கூறினும், வெகுண்டு கூறினும், அவ்வப் பயன்களைப் பயந்தேவிடும் மொழி, அருளிற் கூறல் அநுக்கிரக மொழி. வெகுண்டு கூறல் சாப மொழி,] என்றும்,

குணமெனும் குன்றேறி நின்றார்

[துறவு, மெய்யுணர்வு, அவாவின்மை முதலிய நற குணங்களாகிய குன்றின் முடியின்கண் ஏறிநின்ற முனிவர்.] என்றும்,

அந்தணர்

[அழகிய தட்பத்தையுடைய துறவறத்தினின்றவர்.] என்றும் புகழ்கின்றார்.

இவ்வதிகாரத்தின் ஆதியந்தப் பாக்களும் அவற்றிற்குப் பரம வைணவசிகாமணியாகிய பரிமேலழகியார் உரையும் பின்வருமாறு :—

ஒழுக்கத்து நீத்தார் பெருமை விழுப்பத்து
வேண்டும் பனுவற் றுணிவு. (1)

[தமக்குரிய வொழுக்கத்தின் கண்ணே நின்று துறந்தாரது பெருமையை விழுமிய பொருள்கள் பலவற்றுள்ளும் இதுவே விழுமிதென விரும்பும் நூல்களது துணிவு. தமக்குரிய வொழுக்கத்தின் கண்ணே நின்று துறத்தலாவது:- தத்தம் வருணத்திற்கும் நிலைக்கும் உரிய வொழுக்கங்களில் வழுவாதொழுக அறம் வளரும்,

அறம் வளரப் பாவந்தேயும், பாவந்தேய அறியாமை நீங்கும், அறியாமை நீங்க நித்த அநித்தங்களது வேறு பாட்டுணர்வும் அழிதன் மாலையவாய இம்மை மறுமை யின்பங்களின் உவர்ப்பும் பிறவித் துன்பங்களுந் தோன் றும், அவை தோன்ற வீட்டின்கண் ஆசையுண்டாம், அஃதுண்டாகப் பிறவிக்குக் காரணமாகிய பயனில் முயற்சிகளெல்லாம் நீங்கி வீட்டிற்குக் காரணமாகிய யோக முயற்சியுண்டாம், அஃதுண்டாக மெய்யுணர்வு பிறந்து புறப்பற்றாகிய எனதென்பதும் அகப்பற்றாகிய யானென்பதும் விடும்; ஆகலான் இவ்விரண்டு பற்றை யும் இம்முறையே உவர்த்து விடுதலெனக் கொள்க. பனுவலெனப் பொதுப்படக் கூறியவதனான், ஒன்றை யொன் றொவ்வாத சமய நூல்களெல்லாவற்றிற்கும் இஃதொத்த துணிவென்பது பெற்றாம். செய்தாரது துணிவு பனுவன் மேலேற்றப்பட்டது.]

அந்தண ரென்போ ரறவோர்மற் றெவ்வுயிர்க்குஞ்
செந்தண்மை பூண்டொழுக லான். (10)

[எல்லாவுயிர்கண் மேலுஞ் செவ்விய தண்ணளியைப் பூண்டொழுகலான், அந்தணரென்று சொல்லப்படுவார் துறவறத்தினின்றவர். பூணுதல் - விரதமாகக் கோடல். அந்தணரென்ப தழகிய தட்பத்தை யுடையாரெனவே துப்பெயராகலின், அஃதவ் வருளுடையார் மேலன்றிச் செல்லாதென்பது கருத்து. அவ்வாறாணை யுடையா ராயினும் உயிர்கண்மாட் டருளுடையார் என்பது இத னாற் கூறப்பட்டது.]

இங்கு கூறப்பெறும் அந்தணர் முக்கோற்பகவர். (திரிதண்ட சந்யாஸிகள். பகவர் - குணநிஷ்டர்.)

தமிழிலுள்ள மிகப்பழைய நூலாகிய தொல்காப் பியத்தில் அந்நூலாசிரியர்

நூலே கரகம் முக்கோல் மணையே
ஆயுங்காலை அந்தணர்க்குரிய

என்று ஒரு சூத்திரம் கூறியிருக்கிறார். இதில் முக்கோற் பகவரின் இயல்பெடுத் தியம்பியுள்ளார் தோல்காப்பியர். இதன் பொருள் :- முந்நூலும், குண்டிகையும், (கமண்டலமும்) முக்கோலும், ஆமை மணையும், போல்வன அந்தணர்க்குரிய என்பதாம். இங்கு முக்கோல் உடையவர்களை 'அந்தணர்' என்று பொதுச் சொல்லாற் சுட்டினரேனும் விசேஷணங்களை நோக்கின் அச்சொல் திரிதண்ட சந்யாஸிகளைக் குறிப்பிடும் என்பதறியலாம். முற்றத்துறந்து எல்லாவுயிர்களிடத்தும் கருணையே வடிவாக அமைந்தவர்களே முக்கோற்பகவர்.

வைணவ சமயச் சந்நியாசிகள் தங்கள் கையில் திரிதண்டம் ஏந்துவதை இன்றளவும் காண்கின்றோம். வேறு சமயத்தினர் ஒரு கோல் கொள்ளுகின்றனர். திரிதண்டமாவது மூன்று கோல்கள் ஒன்றாகச் சேர்த்துக் கட்டப்பட்டது. சித், அசித், ஈச்வரன் என்ற மூன்று தத்துவங்களே உள்ளனவா மென்பதைப் புலப்படுத்துவதற்கு முற்றத்துறந்தார் முக்கோலைத் தரிக்கின்றனர் என்பது ஸம்பிரதாயம் வல்லார் துணிபு. இவ்வாறு முக்கோல் ஏந்தும் வழக்கம் நம் வைணவ சமயத்தில் உள்ள ஒரு சிறப்பியல்பு. இவ்வழக்கம் நந்தமிழ் நாட்டில் நெடுங்காலமாக இருந்து வருகிறது. எவ்வளவு காலத்துக்கு முன் இவ்வழக்கம் இந்நாட்டில் தோன்றிற்று என்று அறுதியிட்டுக் கூற இயலாது. மேலே குறிப்பிட்ட சூத்திரத்தினால் தொல்காப்பியர் காலத்துக்குப் பன்னெடுங் காலம் முன்பே முக்கோல் ஏந்தும் வழக்கம் தமிழ் நாட்டில் தோன்றியிருக்கவேண்டும் என்று துணிந்து கூறலாம்.

மநுதரும சாத்திரம் பின்வருமாறு கூறுகின்றது.

ஸந்நியாச ஆசிரமஞ் செய்து கொண்டவன் பரிசுத்தமான கமண்டலம், தண்டம், பவித்திரம் - இவை மு-லானவற்றைக் கிரகித்துக்கொண்டு ஒருவரால் கொடுக்கப்பட்டாலும், விஷய போகங்களில் விருப்பமில்லாதவனாய் மௌன விரதத்தோடிருக்க வேண்டியது.

—(ஆறாவது அத்தியாயம். சுலோகம் 41)

தலைமயிர் - நகம் - மீசை இவைகளை க்ஷவரஞ் செய்துகொண்டு கமண்டலம், திரிதண்டம், தருப்பை, காஷாயம், இவைகளைத் தரித்துக்கொண்டு யாரையுந் துன்பப்படுத்தாமல் ஜிதேந்திரியனாய் ஒரிடத்திலும் நிலைபெற்றிராமல் தேசசஞ்சாரஞ் செய்யவேண்டியது.

—(ஷை சுலோகம் 52.)

மனிதன் பெரும்பாலும் தேகத்தினால் அசுப கருமத்தைச் செய்தால் ஸ்தாவர ஜநநத்தை அடைகிறான், வாக்கினால் பெரும்பாலும் அசுப கருமத்தைச் செய்தால் பக்ஷி அல்லது மிருகமாகப் பிறக்கிறான், மனத்தினால் பெரும்பாலும் அசுப கருமத்தைச் செய்தால் சண்டாளன் முதலிய ஹீன ஜாதியில் பிறக்கிறான்.

- (பன்னிரண்டாவது அத்தியாயம், சுலோகம் 9

எவன் மநம், வாக்கு, காயம் இந்த மூன்றையும் அசுப கருமங்களைச் செய்ய வொட்டாமல் தண்டித்து தன் புத்தியில் அடக்குகிறானோ அவன்தான் திரிதண்டி யென்று சொல்லப்படுகிறானே யல்லது வெளியில் திரிதண்டத்தைத் தரிக்கிறதினால் மாத்திரம் திரிதண்டி யென்று சொல்லபபட மாட்டான். (ஆதலால் வெளியில் தரிப்பதுபோல உள்ளுந் திரிதண்ட மிருக்கவேண்டும் என்பது கருத்து. திரிதண்டம் என்பது - ஸந்நியாசி கையில் தரிக்கிற முக்கோல்) —(ஷை சுலோகம், 10)

தலைவனோடு சென்ற தலைவியைச் செவிலித்தாயானவள் பாலைவனத்தின் வழியாகத் தேடிச் செல்கின்றபோது உண்மையை அறிந்துகொள்ள எதிர்ப்பட்ட முக்கோற் பகவரை வினவுவதோர் புலனெறி வழக்கு உண்டு. அதனைச் சற்று விளக்குவல்.

அணங்குபோன்ற தலைவியைத் தான் சென்று தேடிக் கொணர்வதாய் நற்றாய்க்கு ஆறுதல் பகர்ந்து செவிலி புறப்படுகின்றாள். தேடச் செல்லும் செவிலியின் கண்கள் வழியில் முக்கோல் ஏந்திய அந்தணரைச் சந்திக்கின்றன. தன் மகளைப்பற்றி அவர்களைக் கேட்டறிய விழையும் அவள், "அருந்தவ முனிவரே! வஞ்சிக் கொம்பன்ன ஒருத்தி ஒரு வீரன் பின் சென்றதைக் கண்டீரோ?" என வினவுகிறாள். "ஆம், யாங்கள் கண்டோம், இதைக் குறித்து நீ வருந்துதல் தகுதியுடையதன்று, முத்தும் தான் பிறந்த சங்கை விட்டு,

அணிபவரை அடைகின்றது. நீயும் உன் பெற்ருேரை நீங்கி ஒரு தலைவனை அடைந்திருக்கின்ருய். அங்ஙனமே அவளும் ஒரு கொழுக் கொம்பை நாடிச் சென்ருள். இது உலகியற்கை. ஆதலின் நீ துன்புறுதலை ஒழிக'' என முனிவர் அவளை ஆற்றுவிக்கின்றனர். இது "ஆற்றிடை முக்கோற் புகவரை வினுதல்'' என்னுந் துறை.

கலித்தொகை என்ற பழந்தமிழ் நூலில்,

எறித்தரு கதிர்தாங்கி யேந்திய குடை நீழ
லுறித்தாழ்ந்த கரகமு முறைசான்ற முக்கோலு
நெறிப்படச் சுவலசைஇ வேருேரா நெஞ்சத்துக்
குறிப்பேவல் செயன்மாலைக் கொளைநடை யந்தணீர்
வெவ்விடைச் செலன்மாலை யொழுக்கத்தீ ரிவ்விடை
யென்மக ளொருத்தியும் பிறன்மக னெருவனுந்
தம்முளே புணர்ந்த தாமறி புணர்ச்சிய
ரன்ன ரிருவரைக் காணிரோ பெரும
காணே மல்லேங் கண்டனங் கடத்திடை
யாணெழி லண்ணலோ டருஞ்சுர முன்னிய
மாணிழை மடவா ருயிர்நீர் போறீர்;
பலவுறு நறுஞ்சாந்தம் படுப்பவர்க் கல்லதை
மலையுளே பிறப்பினு மலைக்கவைதா மென்செய்யு
நினையுங்கா னும்மக ளுமக்குமாங் கனையளே;
சீர்கெழு வெண்முத்த மணிபவர்க் கல்லதை
நீருளே பிறப்பினு நீர்க்கவைதா மென்செய்யுந்
தேருங்கா னும்மக ளுமக்குமாங் கனையளே;
எழ்புண ரின்னிசை முரல்பவர்க் கல்லதை
யாழுளே பிறப்பினும் யாழ்க்கவைதா மென் செய்யுஞ்
சூழுங்கா னும்மக ளுமக்குமாங் கனையளே;
எனவாங்கு,
இறந்த கற்பினுட் கெவ்வம் படரன்மின்
சிறந்தானை வழிபடீஇச் சென்றன
ளறந்தலை பிரியா வாறுமற் றதுவே.

என்று ஒரு பகுதி இருக்கிறது. இதற்கு நச்சினர்க்கினியருரை வருமாறு:—

"இஃது உடன் போய தலைவி பின் சென்ற செவிலி இடைச்சுரத்து முக்கோற் பகவரைக் கண்டு இவ்வகைப்

பட்டாரை ஆண்டுக் காணீரோவென வினவியாட்கு, அவரைக் கண்டு அஃதற மெனவே கருதிப் போந்தோம்; நீரும் அவர் திறந்து எவ்வம்பட வேண்டாவென எடுத் துக் காட்டி, அவர் தெருட்டியது.''

'' பெருமா! அந்தணீர்! உறியிலே தங்கின கமண் டலத்தையும், அரி அயன் அரனென்னும் மூவரும் ஒரு வரென்று சொல்லுதல் தன்னிடத்தே அமைந்த முக் கோலையும் முறைமை படத் தோளிலே வைத்து எறித் தலைச் செய்கின்ற ஞாயிற்றின் கதிர்களைத் தாங்குகையி னுலே எடுக்கப்பட்ட குடை நிழலிலே, வெவ்விய காட் டிடத்தே போதல் இயல் பாகவுடைய ஒழுக்கத்தினை யுடையீராதலான் உமமை வினவுகின்றேன்; இக்காட் டிடத்து என்னுடைய மகளொருத்தியும் வேறொருத்தி மகனொருவனும் பிறரறியாமல் தங்களிலே கூடின தாங் கள் இப்பொழுது பிறர் அறிந்த கூட்டத்தினையுடைய ராயினர்; அத்தன்மையர் இருவரைக் காணுதிருந்திரோ? இக் காட்டிடைக் காணுதிருந்தேம் அலலேம்; கண்டு அஃ தறமென்றே கருதிப்போந்தேம்; ஆண் மக்கட்குக் கூறும் அழகினையுடைய தலைவனேடே இவ்வரிய சுரத் தைப் போகக் கருதிப் போந்த மாட்சிமைப்பட்ட அணி யினையுடைய மடப்பத்தையுடையாளுந் தாயாந்தன் மையை உடையீர் போலே இருந்தீர்; நறியன பலவுங் கூடும் நறிய சந்தன மரங்கள் மெய்ப்படுப் பார்க்குப் பயன் கொடுப்பதல்லது மலையிடத்தே பிறந்தனவாயி னும் அச் சந்தனங்கடாம் அம்மலைக்கு என்ன பயனைக் கொடுக்கும்? ஆராயுங் காலத்து நும்முடைய மகள் பயன்படும் பருவத்து நுமக்கும் பயன்படாள்; தலைமை பொருந்திய வெள்ளிய முத்துக்கள் அணிவார்க்குப் பயன் படுவதல்லது கடலிடத்தே பிறந்தனவாயினும் அம் முத்தங்கடாம் அக் கடலுக்கு என்ன பயனைக் கொடுக்கும்? ஆராயுங் காலத்து நும்முடைய மகளும் பயன்படும் பருவத்து நுமக்கும் பயன்படாள்; ஏழு நரம்

பாற் கூட்டிய இனிய ஓசைகள் பாடுவோர்க்குப் பயன் கொடுத்தல் அல்லது யாழிடத்தே பிறந்தனவாயினும் அவ்வோசை கடாம் அந்த யாழுக்கு என்ன பயனைக் கொடுக்கும்? ஆராயுங்காலத்து நும்முடைய மகள் பயன் படும் பருவத்து நுமக்கும் பயன் படாள் ; ஆதலான் மிக்க கற்பினையுடையாளுக்கு வருத்த முறுதே கொள்ளுமின். இரு முதுகுரவரிலுஞ் சிறந்த கணவனை வழிபட்டு அவன் பின்னே போனாள். இம்மையில் இங்ஙனங் கற்புப் பூண்டு நிகழ்த்தும் இவ் வில்லறமே அறங்களிற்றலை யான அறம் ; மறுமையில் இவ்விருவரும் நீங்காமல் சுவர்க்கத்திலே செல்லும் வழியும் அவ்வழிபாடே''

இவ்வுரையில் '' உரைசான்ற முக்கோல் '' என்பதற்கு '' அரி அயன் அரன் என்னும் மூவரும் ஒன்று என்று காட்டுவதற்கு முக்கோல்'' என்றும், ''வேறோரா நெஞ்சம்'' என்பதற்கு, ''அம்மூவரையும் வேறாகக் கருதாமல் ஒருவராகக் கருதும் நெஞ்சம் '' என்றும் எழுதினர் நச்சினார்க்கினியர். அப்பொருள் பொருத்தமாகத் தோன்றவில்லை. '' முக்கோல் '' தத்துவக் கொள்கையைக் காட்டுவதாகவும், ''வேறோரா நெஞ்சம்'' என்பதற்குப் பிரயோஜநாந்தரங்களை நினையாத நெஞ்சம் என்றும் கொள்வதே பொருத்தமாகத் தோன்றுகின்றது. எனவே, '' எறித்தருகதிர்தாங்கி ... ... ... நடையந்தணீர்'' என்பதற்கு ''கையில் கரகமும் குடையும் முக்கோலும் ஏந்திக் கொண்டு, இறைவன் திருவடிகளையே நினைக்கும் நெஞ்சத்தையுடையவர்களாய், (பிரயோஜநாந்தர பரராக இல்லாமல்) ஐம்பொறி யடக்கமுடையவர்களாய் (விஷயாந்தர இச்சை இல்லாதவராக) உள்ள அந்தணர்களே'' என்பதே கருத்து எனக் கொள்க.

மேலும் அக் கலித்தொகையிலேயே ''முக்கோல் கோள் அந்தணர் முதுமொழி நினைவார்போல்'' என்று மற்றோரிடத்தும் கூறப் பெற்றிருக்கிறது. இங்கு முது

மொழி, பிரணவம் என்று உரைகாரர் உரைவரைந்தனர். பிரணவத்தோடு கூடிய திரு மந்திரம் என்று கொள்ளலாம்.

முன்னர்க் காட்டிய "செவிலி முக்கோற்பகவரை வினவியதும்" அதற்கவர் உள்ளவாறெடுத்து உபதேசித்ததும் நோக்க முக்கோற்பகவரிடத்துஆப்தத்வம் உண்டு என்பதும் நன்கு வெளியாகிறது.

"முக்கோற்பகவரை வினாதல்" என்னும் துறை பின் வரும் நூல்களிலும் விளக்கப் பெற்றுள்ளது. அதனைக் காண்பாம்.

நாற்கவிராச நம்பி இயற்றிய "அகப்பொருள் விளக்கம்" எனும் நூலில் "வரைவியல்" 188-ஆவது சூத்திரமும் அதன் உரைப் பகுதியும் வருமாறு;-

188 ஆற்றுத் தாயைத் தேற்றலு மாற்றிடை
முக்கோற் பகவரை வினாதலு * *
* * * * *
* * புதல்வியைக் காணாது
கவலைகூர் தலுமென விவையொன் பானுஞ்
செவிலிபின் றேடிச் சேறற் குரிய

இச் சூத்திரம் செவிலி பின் றேடலின் விரியுணர்த்துதலுதலிற்று. இதன் பொருள்:- ஆற்றுத்தாயைத் தேற்றன் முதலாகப் புதல்வியைக் காணாது கவலை கூர்தல் ஈறுகச் சொல்லப்பட்ட வொன்பதுஞ் செவிலி பின் றேடிச் சேறற்குரியவாம் என்றவாறு. அவற்றுள்,

ஆற்றிடை முக்கோற்பகவரை வினாதற்குச் செய்யுள் :—

ஒருவெண்குடையிரு நீழன் முக்கோல் கொண்டொழுக்கத்தின
லரு வெங்களரி யைந்தாறு செல்வீரருளீ ரெழுபார்
மருவெண்டிசை புகழ்வாணன்றென் மாறையென் வஞ்சியன்னாள்
பொருவெஞ் சுடரிலை வேலொரு காளைபின் போயினளே.

—(தஞ்சை 341)

சேயினவரூஉ மதவலி யாவுயர்ந்
தோமை நீடிய கானிடையத்த
முன்னுளும்பர்க் கழிந்த வென்மகட்
கண்டனிராயிற் றெுழு வேனுண்பற்
கோடேந்தல்குலரும் பியதிதலை
வா அர்ந்திலங்கு வாலெயிற்றுப் பொலிந்ததார்ச்
சில்வளைப் பல் கூந்தலளேயவளே
மையணலெருத்தின் முன்பிற்றடக்கை
வல்விலம்பி னெய்யாவண் மகிழ்த்
தந்தை தன்னூரிதுவே
யீன்றேன் யானே பொலி கநும்பெயரே.
—(நற்றிணை 198)

எனவும் வரும்.

“மாறனகப்பொருளும் திருப்பதிக் கோவையும்” என்ற நூலில்

5 செவிலி பின்றேடிச் சென்று நீடல்.

88. நற்றாய் தன்னைத் தேற்றலுங் கற்றறி
முக்கோற் பகவரை முன்னி வினுதலுங்
* * * * * *
செவிலி பின்றேடிச் சென்றுமீள் விரியே. (26)

முக்கோற்பகவரை முன்னி வினுதல்.

425 முக்தாணிரயொடு முப்பாலள் விட்டமும்மைச் செங்கோல்
கை தாமரை வலத்தந்தணீர் வரக் கண்டதுண்டோ
மெய்த்தாரணி புகழ் வேங்கடமால் வெற்பின்செவ்வே
ளொத்தா னெருவனு மொத்தாரில்லாத வொருத்தியுமே.

மீண்டவள் செல்வனும் செல்வியும் வியனக
ராண்டணைந்தனரென வாராய்ந் துரைத்தல்.

438 வரந்துறந்தார்க் கருள்கூர்மங்கை வாணன்வரையினிலென்
கரந்துறந்தாளும் வைவேற்கடுங் காளையுங்கானிரந்
தரந்துறந்தாரென்னு முக்கோற்பகவர் பொற்றாள்பணிந்தே
சுரந்துறந்தாழ்பு னலூரடைந்தார் மென்சுரிகுழலே. (101)

என வரும்.

“திருமாலிருஞ்சோலைக் கலம்பகம்” என்கிற “அழகர் கலம்பகம்” எழுபத்து நான்காவது செய்யுள்

சொல்லாரணப் பொருண்மா லலங்காரர் தண்சோலைவெற்பில்
வல்லாரிளங்கொங்கை மங்கையெங்கே மனுநூல்வழியிற்
செல்லாச்செலுத் தொருகோல்போன் முடங்கியதீங்கருப்பு
வில்லானைங் கோல்வென்று முக்கோல் விழைந்திட்ட
வேதியரே.

என்பது.

இதன் பொழிப்புரை :-

மனுவினாற் சொல்லப்பட்ட நீதிநூலின் வழிப்படியே செல்லாமல் தீய வழியிற் செலுத்தப்படுகிற ஒரு கொடுங்கோல் போல வளைந்திருக்கின்ற இனிய கரும்பாகிய வில்லையுடையவனான மன்மதனது பஞ்சபாணங்களைச் சயித்து திரிதண்டத்தை விரும்பிக் கையிற் கொண்ட பிராமணர்களே! சிறப்பித்துச் சொல்லப்படுகிற வேதங்களின் பொருளாகிய அழகப்பிரானது குளிர்ந்த சோலைமலையிலே சூதாடுகிற கருவியையொத்த இளைய தனங்களையுடைய மகள் எவ்விடத்திற் சென்றாள்?

தன்னைப் பிரிந்துபோன தலைமகனது பின்னே உடன்சென்ற தலைவியைக் காணாமல் தேடிவந்த செவிலித்தாய், இடையிலே திரிதண்ட சந்நியாசிகளைக் கண்டு 'எங்கள் மகள் எங்கே சென்றாள்? சொல்லுங்கள்' என்று வினவியவிது, "வேதியரை வினவல்" என்னுந் துறை. முப்பகையை வென்றதற்கும், மூன்றாசைகளையொழித்ததற்கும் அறிகுறியாகத் துறவிகள் முக்கோல் தரித்தல் இயல்பு.

"பத்துப் பாட்டி"னுள் ஒன்றாகிய முல்லைப் பாட்டில், போர்க்களத்துப் பாசறையில் போர்வீரர்கள் வில்லை நட்டு அதில் அம்பறாத்தூணியைக் கட்டியிருந்ததற்கு,

37 கற்றோய்த் துடுத்த படிவப் பார்ப்பான்
முக்கோல் அசை நிலை கடுப்ப.

[துகிலைக் காவிக்கல்லைத் தோய்த்துடுத்த விரதங்களையுடைய முக்கோல் அந்தணன் அம் முக்கோலிலே அந்த

உடையினை இட்டுவைத்த தன்மையை யொக்க] என ஒரு உபமானம் காணப்படுகிறது. இப்பகுதி முக்கோல் உடையவர்கள் காஷாயந்தரித்த முனிவர்களே என்று தெளிவாகக் கூறுகின்றது. இங்கு முக்கோல் ஏந்தியவர்களைப்பற்றிக் காட்டிய குறிப்புக்களை நோக்குமிடத்து, அவர்கள் ஐம்பொறியடக்க முடையவர்களாய், (ஜிதேந்திரியராய்) இறைவன் திருவடிகளை நினைந்து இன்புறுவதல்லது வேறு பயன் எதுவும் நினையாதவர்களாய், காஷாயந்தரித்த சந்நியாசிகளாய்த் தம் சிஷ்யர் கூட்டத்தோடு ஆங்காங்கு யாத்திரை செய்துகொண்டிருப்பார்கள் என்று உணரலாகும்.

திருமழிசை யாழ்வார் தாம் அருளிச் செய்த " திருச்சந்த விருத்தம் " எனும் திவ்ய ப்ரபந்தத்தில்,

> சிற்றெயிற்று முற்றல் மூங்கில் மூன்றுதண்ட ரொன்றினர்
> அற்ற பற்றர் சுற்றி வாழும் அந்தணீர ரங்கமே. (104)

[சிறுகின கணுக்களை யுடைத்தாய் முற்றினதான மூங்கிலினால் செய்யப்பட்ட திரிதண்டத்தையுடையரான ஸந்நியாசிகளும், ஏகாந்திகளும், விஷயாந்தரம் முதலியவற்றில் பற்று அற்றுப்போனவர்களும் சூழ்ந்து (பிரதக்ஷிணம் செய்துகொண்டு) வாழும் இடமான அழகியதாய்க் குளிர்ந்த தீர்த்தத்தை உடையதான திருவரங்கமாம்.] என்று பாசுரமிட்டுள்ளார். இதனால் ஆழ்வார் காலத்தே முக்கோல் முனிவர்கள் யாத்திரை செய்துகொண்டே திருவரங்கம் முதலிய திருப்பதிகளிலே வதிந்துவந்தனர் என்பது போதரும்.

பண்டைநாற் கடலைக் கடந்து எல்லைதேர்ந்த ஸ்ரீ ஆண்டாள்

> செங்கல் பொடிக்கூறை வெண்பல் தவத்தவர்
> தங்கள் திருக்கோயில் சங்கிடுவான் போதந்தார்.
>
> —(திருப்பாவை 14]

[காவிப் பொடியில் தோய்த்த ஆடை உடுத்தவர்களும், வெளுத்த பற்களை உடையவரும், ஸாத்விகருமான

ஸங்யாசிகள் தங்கள் திருக்கோயில்களில் திருவாராதனம் பண்ணுகைக்காக ஸந்த்யாவந்தனம் பண்ணிவாரா நின்றுர்கள்.]

என்று பாசுரமிட்டுள்ளதும் நோக்கத்தக்கது.

"ஸங்யாசிகள் ஸந்த்யா வந்தனம் பண்ணித் தங்களுடைய அகங்களிலே திருவாராதநம் பண்ணுங் காலமாய்த்து என்றுமாம்" (மூவாயிரப்படி.)

"'செங்கல் பொடிக்கூறை' என்று, காஷாயவஸ்த்ரதாரிகள் என்றும், 'வெண்பல்' என்று. தாம்பூலாதிகள் இல்லாமையாலே போக்யத்ரவ்யங்களில் விரக்தர் என்றும், 'தவத்தவர்' என்று-ஸாத்விகர் என்றும் சப்தார்த்தம் விவக்ஷித்து, திருமலைநம்பி அருளிச்செய்த யோஜநாந்தரம் அருளிச்செய்கிறுர் ஸங்யாசிகள் இத்யாதி." —(அரும்பதவிளக்கம்)

தத்வநிஷ்டராய்ப் பரமைகாந்திகளான ஸங்நியாசிகளின் உணர்த்தியைக் கூறுகின்றது என்பது திருமலை நம்பி நிர்வாஹம்.

நான்காவது ஆச்சிரம மூன்றிய மாதவத்தோர் தாங்கும் வடிவம் ஈதேயாம் என்றதை இராமாயண பாரதங்களில் சில வரலாற்ருல் அறியலாம். அவை :—

இராவணன் தன் தங்கையாகிய சூர்ப்பணகிவாயிலாகச் சீதாபிராட்டியாரின் எழில் நலங்களைக் கேள்வியுற்றுப் பிராட்டியிடத்திற் காதல்கொண்டு அவரையடைய முயன்றனன். பின்னர் மாரீசனிடத்திற்சென்று தன் மனனிலையைத் தெரிவித்து அவனை மாய மானுகும்படி செய்து இராமபிரானிருக்கும் சூழலையடைந்து ராமலக்ஷ்மணர்களைப் பிரித்துப் பிராட்டியார் தனித்திருக்கும் சூழ்ச்சி செய்தனன். அப்பொழுது இராவணன் 'இனி நாம் எந்தரூபத்தைக் கொண்டால் பிராட்டியார் நம்புதற்கிடனுண்டு' என்று தனக்குள் ஆய்ந்து,

இளையவனே கலுமிறவு பார்க்கின்ற
வளையெயிற் றிராவணன் வஞ்சமுற்றுவான்
முளைவரித் தண்டொரு மூன்று முப்பகைத்
தளையரி தவத்தவர் வடிவுந் தாங்கினன். (20)

[இளையவன் - இலக்குமணன்; இறவு - நீங்கிச் செல்லுதலை; முளைவரித் தண்டொன்று மூன்று - திரிதண்டம்; முப்பகை - காமம், வெகுளி, மயக்கம்; மண்ணாசை பெண்ணாசை பொன்னாசை யென்னும் ஈஷணத்திரயங்களுமாம்; 'தவத்தவர் வடிவுந் தாங்கினன்' என்றதனால் காஷாய வஸ்திரந் தரித்தல், கையிற் கமண்டலம் ஏந்துதல் முதலியன பெறப்படும்.]

ஊணிலனு மென வுலர்ந்த மேனியன்
சேணெறி வந்ததோர் வருத்தச் செய்கையன்
பாணியி னடத்திடைப் படிக்கின்றானென
வீணையி னிசைபட வேதம் பாடுவான். (21)

[ஊணிலனுமென - உணவு ஒழிந்தவன்போல; உலர்ந்த மேனியன் - வற்றிய உடம்பை உடையவன்; சேணெறி - நெடுந்தூரம்; வேதம் பாடுவான் - சாமகானஞ் செய்பவனுமாய்.]

பூப்பொதி யவிழ்ந்தன நடையன் பூதலந்
தீப்பொதிந்தா மென மிதிக்குஞ் செய்கையன்
காப்பரு நடுக்குறு ங்காலன் கையினன்
மூப்பெனும் பருவமு முனிய முற்றினன். (22)

[பூப்பொதி யவிழ்ந்தன - மலரின் இதழ் மெல்ல மெல்ல விரிந்தாற்போன்ற; காப்பரு நடுக்கு - தடுக்க வொண்ணாத நடுக்கம்,]

தாமரைக் கண்ணனோடேர் தவத்தின் மாலைய
னமை யினிருக்கையன் வளைந்த வாக்கைய
னமநூன் மார்பினனு கினனரோ
தூமனத் தருந்ததி யிருந்த சூழல்வாய். (23)

— (இராமாவதாரம், ஆரணிய காண்டம், சடாயுகாண் படலம்.)

[நாமநூன் மார்பினன் - பெருமை பொருந்திய முப்புரி நூலைத் தரித்த மார்பை உடையவன்; தூமனத்

தருந்ததி - பரிசுத்தமான மனத்தையுடைய அருந்ததி போன்ற கற்பினை யுடையளான சீதாதேவி,]

உணவில்லாதவனைப்போல வற்றிய உடலினை யுடையவனாகவும், மிகுந்த தூரத்திலிருந்து வந்த துன்பத்தின் செயலினை யுடையவனாகவும், வீணையிசை போல வேதமோதுபவனாகவும், மலர்விரிவதுபோல மெல்ல நடத்தலையுடையவனாகவும், பூமியானது நெருப்பைப் பொதிந்துள்ளதென மதித்து அஞ்சியடிவைப்பவனாகவும், கால்கை நடுக்கமுடையவனாகவும், மூப்பென்ற பருவமே வெறுக்கத்தக்க சரீரத்தையும் முப்புரி நூலை உடையவனாகவும் உள்ள ஓர் திரிதண்ட ஸந்யாஸியாய்ப் பிராட்டியார் இருக்கையை அடைந்தார். பிராட்டியாரும், 'இவன் முற்றத் துறந்த முனிவனும்' என்று ஸத்கரித்தார்.

அருச்சுனன் தீர்த்தயாத்திரை செய்துவருகிற காலத்தில் துவாரகாபுரியை யடைந்தனன். அங்குச் சுபத்திரையை மணம்புரிந்துகொள்ளவேண்டும் என்று காதலுற்று,

> பாகன்ன மொழிக் கனிவாய் முத்தமூரற்
> பாவை நலம்பெற முக்கோற் பகவனானான்
>
> —(வில்லிபாரதம், ஆதிபரு, அருச் 49(

என்றபடி திரிதண்ட சந்யாஸியாக பலராம கிருஷ்ணர்களின் அரண்மனையை அடைந்தான், அப்பொழுது,

> முக்கோலுங் கமண்டலமுஞ் செங்கற்றூசு
> முந்நூலுஞ் சிகையுமாய் முதிர்ந்துதோன்று
> மக்கோல மனைவருங் கைதொழுது நோக்கி
>
> —(வில்லிபாரதம், ஆதிபரு, அருச், 55)

என்றபடி அவர்கள் முனிவரை நல்வரவேற்றார்கள். பின்னர் கண்ணபிரான் அருச்சுனன் கருத்தறிந்து, பலராமன் கட்டளைப்படி சுபத்திரையிருக்கும் கன்னிகா மாடத்தைச் சார்ந்த உத்தியான வனத்தில் அர்ச்சுனனாகிய முக்கோற் பகவனை இருக்கும்படி செய்து சுபத்

திரையைப் பணிவிடைசெய்யக் கட்டளையிட்டு இருவருக்கும் மணம் செய்வித்தனன்.

இங்கு இராவணனும் அருச்சுனனும் தம் குணங்குறி செயல்களைக்கண்டு பிறர் நம்புவதற்கு முக்கோற் பகவரானார்கள் என்பதனால், முக்கோற் பகவரிடத்தில் ஆப்தத்துவம உண்டென்பது தெள்ளிதிற் புலனாயிற்று. மேலும் பண்டைநூலாகிய சங்கநூல்களிலும் ஏனைய சந்யாசிகளை வினவுவதாக ஒரு துறையுமின்றி முக்கோற் பகவரை வினவுவதாகத் துறை காணப்படுவதினாலும், இவர்களிடத்தில் ஆப்தத்துவம் உண்டென்பது பண்டைக்காலம்தொட்டு வந்த அப்படிப்பட்ட வழக்காம் என்பதும் தேற்றம்.

பண்டைக்காலமுதல் நன்கு சிறப்பித்துக் கொண்டாடப் பெற்றுவரும் முக்கோற் பகவரில் முகுந்தனடி பணியும் யதிகட்கிறைவராய்த் திகழ்ந்தவர் ஏரணி கீர்த்தி இராமாநுச முனியாய பெரும்பூதூர் வந்தவரால்.

பற்ப மெனத்திகழ் பைங்கழ லுன்றன பல்லவ மேவிரலும்
பாவன மாகிய பைந்துவ ராடை பதிந்த மருங்கழகும்
முப்புரி நூலொடு முன்கையி லேதிகழ் முக்கோ றன்னழகும்
முன்னவர் தந்திடு மொழிக ணிறைந்த முறுவனி லாவழகும்
கற்பக மேவிழி கருணைபொ ழிந்திடு கமலமு கத்தழகும்
காரிசு தன்கழல் சூடிய முடியுங் கனநற் சிகைமுடியும்
எப்பொழு தும்மெதி ராசன் முகத்தழ கென்னித யத்துளதால்
இல்லை யெனக்கெதி ரில்லை யெனக்கெதி ரில்லை
[யெனக்கெதிரே.

—(எம்பார் அருளியது, பெருந்தொகை 1838.)

ஐங்கோலை வென்று கைக்கொண்ட முக்கோலனரை யுடுத்த
செங்கோல வாடையன் கார்க்கோல மாயன்றிருச் சமயஞ்
சங்கோ விடுங்கடன் மாயிருஞாலந் தழைக்க வைத்தோன்.
பைங்கோலக் காவுடைப் பூதூர் முனிபுகழ் பாடுதுமே.

— (திருவேங்கடக் கலம்பகம், காப்பு, 3)

[மன்மதனது பஞ்சபாணங்களையும் ஜயித்து திருக்கையில் தரித்த திரிதண்டத்தை யுடையவரும் இடையிற் சாத்திய சிவந்த அழகிய காஷாய வஸ்திரத்தை

யுடையவரும், காளமேகம் போன்ற திருமேனியை யுடைய திருமாலினது மேலான ஸ்ரீ வைஷ்ணவ மதத்தை சங்கங்கள் ஒலிக்கப்பெற்ற கடலாற் சூழப் பட்ட மிகவும் பெரிய நிலவுலகத்தில் செழிக்கும்படி ஸ்தாபித்தருளியவரும் ஆகிய பசுமையான அழகிய சோலைகளையுடைய ஸ்ரீ பெரும்பூதூரில் திருவவதரித்த இராமாநுச முனிவரது கீர்த்தியைப் பாடித் துதிப்போம்.]

ஐங்கோலு மொரு கோலு நீர்க்கோலம் போ
 லழிய முனிந்தறு சமயமகற்றி யெங்கள்
செங்கோலே யுலகனைத்துஞ் செல்ல முக்கோ
 றிருக்கையிற் கொளெதிராசன் செயத்தைப் பாட

— (சீரங்க நாயகருசல், 19]

[மன்மதனது பஞ்சபாணங்களும் அத்வைத ஸந்யாஸிகட்கு உரிய ஏகதண்டமும் நீரிலிட்ட கோலம் போல அழியும்படி கண்டித்து புறச் சமயங்களாகிய ஷண்மதங்களையும் நிரஸித்து வைஷ்ணவர்களாகிய எங்களது செவ்விய ஆட்சியே (வைஷ்ணவ மதமே) உலக முழுதுஞ் சென்று பரவும்படி திரிதண்டத்தைத் தமது திருக்கையிற் கொண்டுள்ள ஸ்ரீ பாஷ்யகாரரது வெற்றியைத் ததீயர் எடுத்துப் பாடா நிற்க, எதிராசன் மன்மத பாணங்கட்கு இலக்காகாது விரக்தராய், அத் வைத நிரஸநம் செய்து, வேதபாஹ்ய மதங்களின் கொண்டாட்டத்தையும் ஒழித்து, உலகமெங்கும் ஸ்ரீ வைஷ்ணவ மதத்தைப் பரவச்செய்து தமது ஜயஸ் தம்பத்தை ஸ்ரீரங்கத்தில் நாட்டியமை விளக்கப் பெற்றது காண்க.]

"சிஷ்யர் — (வணக்கத்தோடு) பகவந்! காணுத சாக்கிய பாஷண்டர்களால் வேத மார்க்கங் கெடுக்கப் பட்ட காலத்தில் எவருடைய திருவுருவைக் கொண்டு திருமாலால் மூன்று வேதங்களுங் காக்கப்பட்டன வென்று முனி ஜனங்களால் எவர் தியானிக்கப்படுகின் றுரோ அந்த திரிதண்டதரரான (திரிதண்ட சந்நியாசமே

ப்ழமையும் உத்தமுமான தென்பதை யாக்கியவற்கிய ஸ்மிருதி முதலியவற்றாலும், தொல்காப்பியம், இறையனரகப் பொருள், கலித்தொகை முதலியவற்றிலெடுத்த "எறித்தரு கதிர் தாங்கி" யென்ற சான்றோர் செய்யுளாலு முணர்க. இது முன்னரே நன்கு விளக்கப் பெற்றது,) தத்தாத்திரேயரைப் போலத் திவ்யமான யதிராஜ வேஷத்தாலே சேவை சாதித்தருளுகின்றீர்,"

"(குரு) — ஆயுஷ்மந்! வேத பாஹ்யர்களும் குதிர்ஷ்டிகளும் அசுரர்களல்லரோ? அவர்களை நான் விஷ்ணு ரூபங் கொண்டு வெல்லுகின்றேன்,"

"(சிஷ்யர்) — பகவந்! விஷ்ணு ரூபந் தரித்த தேவரீர் விஷ்ணு பாவனையால் நமஸ்கரிக்கத் தக்கீரல்லீரோ? ஆகலால் உபவீதம் பூண்டு ஊர்த்துவ புண்டரந் தரித்தீரும், திரிதண்டமும் சிகையென்னும சிரோபூஷணமுமுடையீரும், சரணமடைந்தோரை ரக்ஷிக்கின்றீரும், திரிலோகத்தின் புண்ய பரிபாகமானீரு மாகிய தேவரீரைச் சரணம் அடைகின்றேன்." (என்று சாஷ்டாங்கமாய் நமஸ்கரித்தார்.)

"(குரு) — ஆயுஷ்மந்! நீ நிகமாந்த சித்தாந்தத்தை ஸ்தாபித்து, பாஹ்ய மதங்களை நிரஸித்து, வைதிகர்களாற் கொண்டாடப்பட்டு, கணக்கில்லாத மங்களங்களுக்குப் பாத்திரமாவாயாக," * *

"(சிஷ்யர்) — ஓ வாதிகளே! சகல வித்தைகளாகிய நதிகளுக்குப் பிறப்பிடமான மலையாயும், சம்சாரமென்னும் மார்க்கத்தில் அலைந்து இளைத்தவர்களுக்கு நிழலைக் கொடுக்கின்ற சிறந்த விருக்ஷமாயும், குமதிகளது சகல மாயைகளென்னு மிருளுக்குப் பாலசூரியனாயும், வேதமென்னுங் கடலின் விருத்திக்குப் பூர்ண சந்திரனாயும், எழுந்தருளி யிருக்கின்ற எமது ஆசார்யராகிய யதிராஜர் இதோ ஜயிக்கின்றார்,"

* * * * * *

"(சிஷ்யர்)—நமது சித்தாந்தத்தினுடைய வைப வத்தாலே நான் ஜயிக்க விரும்புகின்றேன். ராஜந்! இதோ பாரும். போதாயநரது ப்ரபந்தமென்னும் பிர வாகத்தின் சம்பந்தத்தால் நிர்மலமாயும், தோஷமில்லாத உபந்யாசங்களால் செவ்வையாய்ப் பிரகாசிக்கின்ற பிர்ம ஸூத்ர அதிகரணங்களை யுடையனவாயும், விரோத மில்லாதனவாயு மிருக்கின்ற யதிராஜருடைய ப்ரபந்தங்கள், தமது முக்கியமான பொருள்களால் பண் டிதர்களுக்குப் புத்தி விகாஸத்துக்குக் காரணமாகிய நாடியைத் தெறித்தலில் வலியனவாய் விளங்குகின்றன. இன்னும் முதலில் ஸ்ரீமந் நாதமுநிகளது ஞானத்தால் அறியப்பட்டதாயும், பின்பு யமுனைத்துறைவரது அநேக ப்ரபந்தங்களால் விருத்தி பெற்றதாயும், யதீந்திர ருடைய ப்ரபந்தங்களால் நன்றாக ரக்ஷிக்கப்பட்டதாயும், சகல அஜ்ஞாநாந்தகாரத்தை நீக்குவதாயு மிருக்கின்ற நமது சித்தாந்தம், ப்ரத்யக்ஷத்தை மறைப்பது நியாய மன்றென்னுங் கொள்கையாலும் அநுமான விஷயத் தில் லகுவான மார்க்கத்தை யநுசரிப்பதாலும் சாஸ்த் ரத்தால் அறியவேண்டியதாகிய விரோதமில்லாத விஷ யத்தில் நாஸ்திகத்வத்தை விலக்கி நம்பிக்கை யுண்டாக் குவதாலும் சிறந்தது என்பதற்குச் சந்தேகமில்லை."

(ராஜா) அதற்குச் சந்தேகமோ?"

—(*சங்கற்ப ஸூர்யோதயம். இரண்டாமங்கம்.)

---

* இத்தனி நாடகத்தின் தனிச்சீர்மையை நற்றமிழர் நன்கு அறிந்துய்யுமாறு எளிய வசன நடையில் பல்லாண்டுகட்கு முன்பே தயாரித்துளேம். "தமிழர் தொழு வேதாந்தவாசிரியன்" (திருவல் லிக்கேணித் தமிழ்ச் சங்க வெளியீடு - 16. திருவெவ்வுளூர் ஸ்ரீ வீர ராகவப் பெருமாள் திருவடி வாரத்தில் 17-12-1944ல் இடப் பெற்ற காணிக்கை. இவ்வெளியீடு ஸ்ரீமான் டி. எஸ். பார்த்தசாரதி அய்யங்கார் அவர்கள் பேருதவியால்தமிழ் கூறு நல்லுலகு கண்டது.) எனும் பிரசுரம் 81-ஆவது பக்கத்தில் குறிக்கப்பெற்றபடி அது வெளிவருங்காலத்தை ஆவலுடன் எதிர்பார்க்கின்றேம். எந்த நல்லன்பருக்கு அதனைப் பிரசுரிக்க வுதவும் பாக்கியமுளதோ? தேசி கனர் திருவருளே நற்றுணை.

என்பன இவண் அநுஸந்தேயம்.

ஸ்ரீ பாஷ்யகாரர் வளர்த்த நம் ஸம்பிரதாயத்தைத் தூப்புற்கோன் நன்கு பரிபாலித்தார். பின்னர் ஆழ்வார், எம்பெருமானார், வேதாந்த தேசிகர் என்ற மூவருமே ஓருருவெனக் கருதப்பெறும் ஸ்ரீ ஆதிவண் சடகோப யதீந்த்ர மஹாதேசிகன் ஸ்ரீ அஹோபில மடத்தை ஏற் படுத்தி முக்கோற்பகவரிற் றலைவராய் விளங்கினர்.

*பொலிக பொலிக பொலிக போயிற்று வல்லுயிர்ச்சாபம்*
*நலியும் நரகமும் நைந்த நமனுக்கு இங்கு யாதொன்றுமில்லை*
*கலியுங் கெடுங் கண்டுகொண்மின் கடல்வண்ணன் பூதங்கள் மண்மேல்*
*மலியப் புகுந்து இசைபாடி ஆடியுழிதரக் கண்டோம்.* - (5-2-1)

என்று திருவாய்மொழியில் எம்பெருமானாரையும்

*நானிலம் வாய்க்கொண்டு நன்னீ ரறமென்று கோதுகொண்ட*
*வேனிலம் செல்வன் சுவைத்துமிழ் பாலைகடந்த பொன்னே!*
*கால்நிலந் தோய்ந்துவிண் ணோர்தொழும் கண்ணன் வெஃகாவுது அம்பூந்*
*தேனிளஞ்சோலை அப்பாலது எப்பாலைக்கும் சேமத்ததே* - 26.

என்று திருவிருத்தத்தில் ஸ்ரீநிகமாந்த மஹாதேசிகரை யும், நம்மாழ்வாரும்,

*மூளைக்கதிரைக் குறுங்குடியுள் முகிலைமூவா*
*மூவுலகும் கடந்து அப்பால் முதலாய்நின்ற*
*அளப்பரிய ஆரமுதை அரங்கம்மேய*
*அந்தணனை அந்தணர்தம் சிந்தையானை*
*விளக்கொளியை மரதகத்தைத் திருத்தண்காவில்*
*வெஃகாவில் திருமாலைப் பாடக்கேட்டு*
*வளர்த்ததனல் பயன்பெற்றேன் வருகவென்று*
*மடக்கிளியைக் கைகூப்பி வணங்கினளே.* (14)

என்று திருநெடுந்தாண்டகத்தில் அருள்மாரி தாமும் அதிகத சுவவ்ருத்தியாகிய ஸ்ரீநிகமாந்த மஹா தேசிகரைப் பின்னும் குறிக்கொண்டு வாழ்த்தியது போல்

"ஸ்ரீசடகோபஸ்ரீ:" என்று உலகு கொள்ளத்திரி தந்துயரும் கருளக்குன்றனுகிய சிங்கப்பிரானடிக்

கோன்மை வடிவாய்த் தாமே யமர்ந்து சிறக்கும் பெற றியை,

மடநெஞ்சமென்றும் தமதென்றும் ஓர் கருமம் கருதி
விடநெஞ்சை யுற்றுர்விடவோ அனையும் அப்போன்
யரோன்
தடநெஞ்சம் கீண்டபிரானுர் தமதடிக்கீழ் விடப்போ
திடநெஞ்சமாய் எம்மைநீத்து இன்றுதாறும் திரிகின்ற (·6)

என்று திருவிருத்தத்திலும்,

அஞ்சிறையமடநாராய்! அளியத்தாய்! நீயும்நின்
அஞ்சி றைய சேவலுமாய் ஆவா! என்று எனக்கருளி
வெஞ்சி றைப் புள்ளுயர்த்தார்க்கு என்விடுதூதாய்ச்
சென்றக்கால்
வன்சி றையில் அவன்வைக்கில் வைப்புண்டால்
என்செய்யுமோ! –(1-4-1)

வானேற வழிதந்த வாட்டாற்ருன் பணிவகையே!
நான்ஏறப் பெறுகின்றேன் நரகத்தை நகுநெஞ்சே!
தேனேறு மலர்த்துளவம் திகழ்பாதன் செழும்பறவை
தானேறித் திரிவான தாளிணை என்தலைமேலே —(10-6-5)

என்று திருவாய்மொழியிலும், தமதேயாம் குறிப்பிட் கொண்டருளியவாறே, தாபதர் பெருமானுய்த் திகழ் ஆதிவண் சடகோப யதீந்த்ர மஹாதேசிகர் தொடக்கம மறையறக்கோலோச்சி, நெடிதூழி வளர்ந்து விளங் நிற்கும், சிங்கப்பிரானது கோயிற் சடகோபன் சேவடி திருவாயே, பல் பெருங் குருமணிகள், ஒரு முகமாய் கோக்கப்பெற்று, சடகோப யதீந்த்ர மஹாதேசிகர் முருமணிகளாயிலங்கு நலந்திகழாரத்து, இற்றைக்கு யாமனைவரும் கண்டு களிக்குமாறு, எழுபதாண்டு நிறை ெற்று, தமிழ் வேதமறிந்த பகவரால் பல்லாண்டு பாடப் பெற்று விளங்கும் தோளாத ஓர் மாமணியாய், ஆறே ழென ஓன்றிப் பொலியா நிற்கும் ஸ்ரீ ஸ்ரீரங்கசடகோப யதீந்த்ர மஹா தேசிகரது பெருமை பொன்னும் புகழும் மலரும் நாற்றமுமாய்க் கலந்து நின்று அழகினுக்கழகு செய்கின்றது.

பண்டைக் குருக்கணிரை இன்றைக்கு இவ்வழகிய சிங்கரது வடிவாயே நமக்குக் கண்கூடாகியது நமது பெரும்பேறே யாகும்.

அலர் மேல் மங்கையுறை மார்பனும் சடகோப னுறை திருப்பாதனும், புள்ளுயர்த்த பெருமானும், தங்கோயிற் பொறி பரக்கும் திகழ் திருச் சக்கரக் கையனும், செந்தாமரைக் கண்ணனும், அஞ்சல் முழங்கும் அரிமுகனும், கொள்ளக் குறைவிலா வள்ள லாயும், மறைமுடி யண்ணலாயும், எங்கும் விளங்கும் இப்பெருந்தேவே ஆதிகுரு, திருவுக்கும் திருவாய்ச் சிறக்கும் தெள்ளிய இச் சிங்கப்பிரானது சேவடித் திருவே "ஸ்ரீ சடகோபஸ்ரீ :" ஆம், நம் பேராசிரியர்கள் திரு முடித்திருவே "ஸ்ரீ சடகோபஸ்ரீ :"

இன்னருள் சுரந்து, முடி சூட்டி, மதி நலமருளும் பரம்பொருள் தானே தனது பெருமை இன்று பின்னும் வளர்ந்தோங்குமாறு, இந்த ஸ்ரீ ஸ்ரீரங்க சடகோப யதீந்த்ர மஹாதேசிகரை அன்று திருவரங்கத்தில் ஸ்ரீ சட கோபஸ்ரீ : என்று முடி சூட்டி வைத்து, அச்சிறப்பையே பின்னும் நன்கு வளர்த்து, இவ்வேழுபதாண்டு நிறைவை யும் இவர் பால்தானே இனிது அருளி, "அருள்மாரி" எனும் தனது மெய்ம்மையையே நிலை நாட்டித் தன் மஹாவிஷ்ணுத்வத்தையே நன்கு சிறப்பித்துக் கொண் டான்.

அருள்மாரி பொழியா நிற்கும் நம் பேராசிரியச் செல்வராகிய திருவரங்க சடகோப யதீந்த்ர மஹா தேசிகர் பெருமை அன்று பொன்னுமாய் மலர்ந்து, இன்று நாற்றமு மாய்க் கமழா நின்றது, இம்மெய்ம் மைக்கும் இம்மா தேசிகரே இலக்கென விளங்கா நிற்பர்.

இன்பமாரியே யாம் இம் மாதேசிகர்க்குத் தொண்டு பூண்டு பல்லாண்டே பல்லாண்டும் பாடு வோமாக,

முப்புரிநூன் மார்பினன் முக்கோல்கைக் கொண்டுளான்
பொய்ப்புலனை வென்ற பொறையுடையான் - மெய்ப்
பொருளைச்

சேவிக்கு நுண்ணுணர்வான் சீரங்க யோகியென்
ஆவிக் கருள்புரிந்தாள் வான்.

ஒருகையிலே யன்ன மொருகையிலே சொன்னம்
வருகையிலே சம்மான வார்த்தை - பெருகுபுகழ்ச்
சீமானு மெங்கள் சீரங்கயோகி யக்
கோமானுக் குள்ள குணம்.

வாழிநர சிங்கர் திருவாழி சடகோபர்
வாழி யெதிராச ரொரு தேசிகரும் வாழி
வாழையடி வாழையெனு மெம்மடிகள் வாழி
வாழி திருரங்க சடகோப குரு வாழி.

வாழி மறையோது முறை வேதியர்கள் வாழி
யாழினிசை யாகுதிருவாய் மொழியும் வாழி
வாழி மநுநீதி யறம் வாழி சரணீதி
வாழிரு மொழிப்புலமை வாழ்த்து மொழி வாழி.